உண்மைநகல்:-

தமிழ்நாடு அரசு

சுருக்கம்

பணி-நகராட்சிகள் மற்றும் நகரியங்கள் -சுகாதாரப் பணியாளர்கள் -பொது சுகாதாரம் (மற்றும்) நோய்த்தடுப்புத்துறை இயக்ககத்திலிருந்து நகராட்சி நிர்வாக இயக்குநரின் கட்டுப்பாட்டிற்குள் கொணர்தல் - ஆணை -வெளியிடப்படுகிறது

---

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை

அரசாணை நிலை எண்.351 நாள்:14.6.1989

ஆணை:-

1939-ஆம் ஆண்டு பொதுச்சுகாதார சட்டத்தின்படி, நகராட்சிகள் மற்றும் நகரியங்களில் பணிபுரியும் சுகாதாரப் பணியாளர்கள் பொதுசுகாதாரம் மற்றும் நோய் தடுப்புத்துறை இயக்குநரின் நிர்வாகக் கட்டுப்பாட்டில் இயங்கி வருகின்றனர். இந்தப் பொதுசுகாதாரப் பணியாளர்கள் மீது நகராட்சி ஆணையர்களுக்கு எந்தவிதக் கட்டுப்பாடும் மற்றும் நடவடிக்கை எடுக்கும் அதிகாரமும் இல்லை. ஆனால் இப்பணியாளர்களுக்கு நகராட்சி நிதியிலிருந்துதான் மாத ஊதியம் வழங்கப்பட்டு வருகிறது. இந்நிலையை மாற்றி, நகராட்சி மற்றும் நகரியங்களில் உள்ள பொதுசுகாதாரப் பணியாளர்கள் அனைவரும் நகராட்சி ஆணையர்களின் நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவருவது தான் சரியானது எனக் கருதப்பட்டது.

2. 7.2.89 அன்று சென்னை இராசாஜி மண்டபத்தில் நடைபெற்ற நகராட்சி மன்றத்தலைவர்கள் மாநாட்டிலும், இப்பொருள் விவாதிக்கப்பட்டு சுகாதாரத்துறைப் பணியாளர்கள் நகராட்சி நிர்வாக ஆணையரின் கட்டுப்பாட்டில் கொண்டு வரவேண்டும் எனத் தீர்மானம் இயற்றியுள்ளனர்.

3. ஆகவே, உள்ளாட்சி அமைப்புகளின் நிர்வாகத்தினை செம்மைப்படுத்துதல் இன்றியமையாததாக கருதுவதாலும், உள்ளாட்சி அமைப்புகளின் கீழ் பணி புரியும் பணியாளர்கள் மீது முழுமையான அதிகாரம் இருந்தால் தான் நிர்வாகம் செம்மையாக நடத்த முடியும் என்பதாலும், நகராட்சிகளின் சுகாதார திட்டங்களின் கீழ் பணி புரியும் பணியாளர்களை உள்ளாட்சி அமைப்புகளின் நேரடியான அதிகாரத்தில் கொண்டு வர வேண்டுமெனக் கருதப்படுகிறது. நகராட்சி மற்றும் நகரியங்களில் பணிபுரியும் சுகாதாரப் பணியாளர்களை கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு, நகராட்சி ஆணையர் மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநரின் நிர்வாகக் கட்டுப்பாட்டில் கொண்டுவர ஆணையிடப்படுகிறது.

(1) பொதுச் சுகாதாரப் பணியாளர்களை உட்பட எல்லா பணியாளர்களையும் நியமித்தல், மாற்றுதல், தண்டனை வழங்குதல் இவை தொடர்பான நிர்வாகக் கட்டுப்பாட்டு அதிகாரங்கள் முழுமையாக நகராட்சியின் தலைமை நிர்வாக அலுவலர்களுக்கு 1939-ம் ஆண்டு தமிழ்நாடு பொதுச் சுகாதாரச் சட்டம் பிரிவு 14(2)-ன்கீழ், ஒப்படைப்பது.

(2) பொதுச் சுகாதாரப் பிரிவு நியமனங்களை ஆணையர் மற்றும் நகராட்சி சுகாதார அலுவலர், இவர்களைக் கொண்ட நியமனக்குழுவின் மூலம் செய்யலாம்.

(3) சுகாதாரப் பணியாளர்கள் தொடர்பான ஒழுங்குநடவடிக்கைகளில், ஆணையரின் முன் இசைவுடன், நகராட்சி சுகாதார அலுவலர் தண்டனை வழங்கலாம்.

(4) பொதுச்சுகாதாரப் பணியாளர்கள் தொடர்பாக ஒழுங்கு நடவடிக்கைகளில் பிறப்பிக்கப்படும் ஆணைகளின் நகல்களை, பொதுச்சுகாதார மண்டல உதவி இயக்குநருக்கும், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநருக்கும் அனுப்பிவைக்கலாம்.

(5) நகராட்சி சுகாதார அலுவலரின் ஆணைகளுக்கு எதிராக மேல்முறையீடு, நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநருக்கும் நகராட்சி நிர்வாக இயக்குநருக்கும் செய்யப்படலாம்.

4. இந்த ஆணையின் அடிப்படையில் தமிழ்நாடு பொதுசுகாதாரச் சட்டம் 1939-ன் (Tamilnadu Public Health Act 1939) கீழ் வெளியிடப்பட்டுள்ள தமிழ்நாடு பொது சுகாதாரப் பணி விதிகளுக்குத் தகுந்த திருத்தங்கள் (Amendments) செய்யப்பட வேண்டியுள்ளதால், நகராட்சி நிர்வாக இயக்குநர், பொதுசுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு இயக்குநருடன் கலந்தாலோசித்து, தேவையான திருத்தங்களை அரசுக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

(ஆளுநரின் ஆணைப்படி)

சி.தங்கராசு,
சிறப்பு ஆணையர் மற்றும் அரசுச்செயலா

//உண்மை நகல்//

[signature] 1088
ஆணையாளர்,
உடுமலைப்பேட்டை நகராட்சி.